**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 282 of 2024

Deposition of P.W. 1

Name of the Witness: திருமதி.அமீனாபீ

Date :08.07.2026

**குறுக்கு விசாரணை**

நான் என்ன வேலை செய்து கொண்டிக்கிறேன் என்றால், நான் இல்லத்தரசி ஆவேன். அத்துடன் நிலம் வாங்கி, விற்கும் வர்த்தகமும் செய்து வருகிறேன். எத்தனை வருடங்களாக இந்த தொழிலில் உள்ளேன் என்றால் 2008ம் ஆண்டிலிருந்து செய்து வருகிறேன். 1ம் வாதி எனக்கு எவ்வாறு தெரியும் என்றால், அவர் என்னுடைய பங்குதாரர் ஆவார். எனக்கும், 1ம் வாதிக்கும் பங்குதாரர் உடன்படிக்கை பத்திரம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நாங்கள் பங்குதாரர் என்ற எந்த நிறுவனமும் ஆரம்பிக்கவில்லை என்றால் சரிதான். நானும், 1ம் வாதியும் எவ்வித Joint Account (இணை கணக்கும்) நடத்துகிறோமா என்றால் இல்லை. நானும், 1ம் வாதியும் இதுவரை எத்தனை நிலங்கள் வாங்கி விற்பனை செய்துள்ளோம் என்றால் இரண்டு சொத்துக்களை வாங்கி பிளாட்டுகளாக போட்டு விற்பனை செய்துள்ளோம். நான் வருமான வரி செலுத்தும் நபரா என்றால் நான் வருமான வரி செலுத்தும் நபர் ஆவேன். 2021ம் ஆண்டு முதல் இன்று வரை வருமானவரி தாக்கல் செய்வதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேனா என்றால் தாக்கல் செய்கிறேன். எனது மூலதனம் என்பது நகைகள் மற்றும் எனது குடும்பத்தில் கொடுத்த எனது பங்கில் இருந்து வந்த பணமாகும். 2008ல் ரூபாய் 2 1/2 லட்சம், 4 1/2 லட்சம் உடன் 50 சவரன் நகையாகும். அந்த 50 சவரன் நகையும் யார் வசம் உள்ளது என்றால் என் தாய் வீட்டில் போட்ட நகைகள் ஆகும். அது என் வசமுள்ளது. தாவாவை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நிலம் வாங்குவதற்காக

பிரதிவாதிகளிடம் ஒரு கோடி ரூபாய் முன் தொகை கொடுத்துள்ளோம். ஆனால் ஒப்பந்தப்படி கிரயம் செய்து கொடுக்காததால் கிரயம் செய்து கொடுக்க வேண்டி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளோம். பிரதிவாதிகள் எங்கு வசித்து வருகிறார்கள் என்றால் 1 முதல் 14 பிரதிவாதிகள் தருமபுரியில் தான் வசித்து வருகிறார்கள். அதில் ஒருவர் சென்னையில் வசித்து வருகிறார். 15ம் பிரதிவாதி எங்களுடைய அங்கீகரிக்கப்பட்ட முகவர் ஆவார். அவர் மூலமாக தான் மேற்படி கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்தினோம். தாவா சொத்தானது எங்குள்ளது என்றால் தடங்கம் கிராமத்தில் உள்ளது. அதனுடைய சர்வே எண்கள் 550, 551 ஆகும். 1 முதல் 14 பிரதிவாதிகளின் குடும்பம் பற்றிய விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். சின்னயைன் வாரிசுதாரர்களுக்கு இடையே பாகபிரிவினை நடத்து கொண்டிருப்பதாகவும், அது முடிந்தவுடன் 3 மாதத்தில் கிரையம் செய்து கொடுப்பதாக சொன்னார். இதில் யார் யாருக்கு எவ்வளவு பங்கு உண்டு என்று குறிப்பாக தெரியுமா என்றால் இல்லை. சின்னையனைக்கு எத்தனை குழந்தைகள் என்று தெரியுமா என்றால் தெரியாது.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

Sd/Tmt.K.R.Jothi, B.A.,B.L.,
Additional District Judge,
Dharmapuri.